# ★ ஈழப்போரை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 20 இதழ் 51
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2-4-1994

(யாழ்ப்பாணம்)
ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் பேரவாவாகும் என்று விடுதலைப் புலிகளின் மாதப்பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் தன்னாட்சி உரிமைப்போராட்டம் இந்திய தேசிய நலனுக்கு விரோதமானது என்ற அச்சம் உண்மையில் மிகைப்படுத்தப்பட்டதொன்றாகும் நகைப்பிற்கிடமானதொன்றாகும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6-ம் பக்கம் பார்க்க]

## குத்தி மேலெழுந்து விமான நோட்டம்

(நெல்லியடி)
ஸ்ரீலங்கா விமானப்படையின் 'வை 12'' ரக குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்றுக் காலை 6-30 மணியளவில் பருத்தித்துறை கடற்கரைப் பகுதியை அண்டிய பிரதேசத்தில் இரு தடவை சுற்றி வட்டமிட்டதுடன் குத்தி மேலெழுந்து அச்சுறுத்திச் சென்றது.

குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர்கள் கடந்த சில நாட்களாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் வட்டமிட்டு நோட்டமிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

6-ம் பக்கம் பார்க்க

# ★ இன ஒடுக்குமுறை தொடர்வதால் இலங்கை அரசுக்கு எதிராக ஆஸி. ஆயுதவிற்பனைக்குதடை

## அதிகாரிகள் குழுவிடம் தெரிவிப்பு

(சிட்னி)
இலங்கை அரசுக்கு எதிராக ஆயுத விற்பனைத் தடையை அமுல் படுத்தியுள்ள ஆஸ்திரேலிய அரசு அதனை தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடிவுசெய்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் இடம்பெறும் இன ஒடுக்குமுறையே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது,

இலங்கை அரசு அண்மைக் காலமாக பல வெளி நாடுகளிலிருந்தும் ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் தீவிர அக்கறை காட்டிவருகிறது. இந் நிலையில் அண்மையில் ஆஸ்திரேலியாவிற்கும் ஆயுதக்கொள் வனவிற்கு ஒரு உயர்மட்டக் குழு சென்றிருந்தது. இக்குழுவினருக்கு ஆஸ்திரேலிய அரச அதிகாரிகள், இலங்கைக்கு எதிராக ஆஸ்திரேலிய அரசு ஆயுத விற்பனைத் தடையை அமுல்படுத்திய விளக்கமும் இது தொடர்ந்தும் நடைமுறையில் இருக்குமெனவும் கூறியுள்ளது. இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக பெரும்பான்மை இன

[6-ம் பக்கம் பார்க்க]

## ஏப்ரல்பூல் சேஷ்டை இளைஞர்கள் கைது

(அரியாலை)
ஏப்ரல்பூல் சேஷ்டைகள் புரிந்தவர்கள் காவல்துறையினரிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

நேற்றுக் காலை 8 மணியளவில் மானிப்பாய் வீதியில் வந்த இளைஞர்கள் யுவதிகளிடம் ஏப்ரல் பூல் சேஷ்டைகள் விட்டபோது அவ்வழியாக வாகனத்தில் வந்த காவல் துறையினர் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்தனர்.

எனினும் ஏப்ரல் பூல் தினமான நேற்று விரும்பத்தகாத செயல்கள் பெரும்பாலும் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 59-[illegible]

## சூரியகந்த விவகாரம் மீண்டும் விசாரணைக்கு முயற்சி

(கொழும்பு)
சூரியகந்த மனித எலும்புக் கூடுகள் பற்றிய விசாரணையை மீண்டும் தொடர்வதற்கு சட்டத்தரணிகள் பலர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது ஏற்கனவே எம்பிலிப்பிட்டிய மஜிஸ்ரேட்டினால் விசாரணையை நிறுத்தி வைக்கும் படி விடுத்த உத்தரவை இரத்தினபுரி உயர்நீதிமன்றம் நிராகரித்து மீண்டும் விசாரணையை ஆரம்பிக்கலாம் என்று வழங்கிய தீர்ப்பைபயன்படுத்தியே சட்டத்

[6-ம் பக்கம் பார்க்க]

## மு. காங்கிரஸ் மாநாட்டிற்கு ஜனாதிபதிக்கு அழைப்பு இல்லை!

(கொழும்பு)
கல்முனையில் இன்று நடைபெறும் முஸ்லிம் காங்கிரஸ் வருடாந்த மாநாட்டுக்கு டி. பி. விஜயதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சிகளுக்கு விடுத்த அழைப்புக்களின் வரிசையில் ஐ. தே. கட்சியின் செயலாளர் சிறிசேன கூரேக்கும், புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்னவுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் வருடாந்த மா

6-ம் பக்கம் பார்க்க]

## பி. பி. ஸி. ஒலி, ஒளி பரப்பால் இலங்கைக்கு அபகீர்த்தி

(லண்டன்)
கொழும்பில் ஆயிரக் கணக்கில் தமிழர்கள் கைது செய்யப்பட்டு கொடுமைகள், சித்திரவதைகளுக்குள்ளாவது பற்றி பி. பி. ஸி. உலக சேவை வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் சில ரண நிகழ்ச்சிகள் ஒலி, ஒளி பரப்பாகியுள்ளன' சர்வதேச மன்னிப்புச் சபை

(6-ம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவிற்கு அஷ்ரப் அழைப்பு

(கொழும்பு)
பொதுசன ஐக்கிய முன்னணி சார்பில் சந்திரிகா குமாரணதுங்கவுக்கு கல்முனையில் இன்று நடைபெறும் முஸ்லிம் காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டுக்கு சமூகம் கொடுக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அழைப்பு விடுத்துள்ளார்.

இவர் முஸ்லீம் காங்கிரஸின் கூட்டத்துக்கு சமூகமளித்தால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கிழக்கு மாகாண முஸ்லீம் வாக்காளர்கள் வாக்குகள் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு கிடைக்கலாம் என்று பி. பி ஸி சிங்கள சேவை தனது செய்தி அறிக்கையில் தெரிவித்தது. ம

## இனப்பிரச்னை குறித்து ஜனாதிபதி அமெரிக்க அமைச்சர் பேச்சு

(கொழும்பு)
இலங்கை வந்துள்ள தெற்காசியாவிற்கான அமெரிக்க உதவி வெளியுறவு அமைச்சர் திருமதி ரொபின் எல் ரபேல் இலங்கை இனப்பிரச்னை குறித்து ஜனாதிபதி விஜயதுங்கவுடன் நேற்று பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி விஜயதுங்கவை இவர் சந்தித்த போது வடக்கு - கிழக்கில் சமாதானத்தையும் வழமையான நிலையையும் மீண்டும் ஏற்படுத்துவதற்கான அரசின் திட்டம் குறித்தும் மனித உரிமைகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார். எல் ரபேலும் சில ஆலோசனைகள் வழங்கியுள்ளார். இது குறித்து திருமதி ரொபின்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. விலும் ஒரு 'ஹெல உறுமய'

(கொழும்பு)
திரு. அனுரா பண்டாரநாயக்கா மூலம் ஐ. தே. க. விலும் ஒரு ஹெலஉறுமய' உருவாகப் போகிறது என்று அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அனுரா பண்டாரநாயக்கா பேசுமிடங்களிலெல்லாம் இரண்டு படுதல பிளவு ஏற்படுவது வழக்கமாகி வருகிறது. இவர் அம்மாவுடன் இருந்த போதே தன்னை தாராளவாதிஎனக்காட்டிக்கொண்டே ஹெலஉறுமய வளர்வதற்கு

[6-ம் பக்கம் பார்க்க]

## இந்தியாவிலிருந்து திரும்பிய 52 ஈழ அகதிகள் நேற்று யாழ். வந்தனர்

(நெல்லியடி)
திருகோணமலையிலிருந்து பிரமாண்ட இரவு புறப்பட்ட மாலோ கப்பல் இந்தியாவிலிருந்து திரும்பிய 52 அகதிகளுடன் நேற்றுக்காலை 8மணிக்கு பருத்தித்துறை வந்தடைந்தது,

[6-ம் பக்கம் பார்க்க]

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

3 பெமனேரியன் ஆண் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. "சோமதி", பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணி. (இ-924)


## மனையிலிருந்து வீழ்ந்து காயம்

(நெல்லியடி)

கல் உடைப்பதில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் பனையிலிருந்து தவறி வீழ்ந்து இடுப்பை முறிந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கலிகை புலோலியைச் சேர்ந்த க. பதிமநாதன் (வயது23) என்னும் இளைஞரே கை முறிந்தவராவார். —160 இ

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களாக மனநோயினால் பீடிக்கப்பட்டிருந்த குடும்பப் பெண்ணொருவர் கிருமிநாசினி உட்கொண்டு மரணமானார்.

மனநோய்க்கு இவர் கடந்த இரண்டு வருடங்களாக யாழ் ஆஸ்பத்திரியில் கிளினிக்கிற்குச் சென்று சிகிச்சை மேற்கொண்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணையின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ)

# இன்று பண்டிதர் பவள விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கம் பண்டிதர் க. மயில்வாகனனாரின் தமிழ், சமய, சமூக சேவைகளைப் பாராட்டி எடுக்கும் பவளவிழா வட்டுக்கோட்டை அருள்மிகு வீரபத்திர கைலாசபிள்ளையார் மேலை வீதியில் முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அரங்கில் இன்று 2ம் திகதி சனிக்கிழமை பண்டிதர் சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெறுகின்றது.

பிற்பகல் 1-35 மணியளவில் பண்டிதர் இல்லத்திலிருந்து வாத்திய சகிதம் பண்டிதர் க. மயில்வாகனனார் ஊர்வலமாக அரங்கிற்கு அழைத்து வரப்படுவார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பேராசிரியர் கலாநிதி அ. ஜெபநேசன், கலாநிதி க. கனகராசா ஆகியோர் ஆசியுரை வழங்குகிறார்கள்.

வைத்தியக் கலாநிதி மு ஸ்ரீ ராசசேகரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க, வித்துவான் பண்டிதர் மு. கந்தையா விருது வழங்குவார்.

'தமிழமுதம்' நூலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா வெளியிட்டு வைப்பதோடு, திரு வெ. நல்லைநாதன் பெறுதியுரை வழங்குகிறார்.

'தமிழமுதம்' ஆய்வுரையை கலாநிதி நா. சுப்பிரமணியன், பண்டிதர் க சச்சிதானந்தன் நிகழ்த்துவதோடு, பல அறிஞர்களின் பாராட்டுரைகளும் இடம்பெறுகின்றன. (ம)

## செப்ரிசிமியா சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்ரிசிமியாவினால் பாதிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்ற சிறுவன் ஒருவன் நேற்றுமுன்தினம் மரணமானான்.

பருத்தித்துறையைச் சேர்ந்த கணேசமூர்த்தி பார்த்தீபன் (வயது 8) என்ற சிறுவனே மரணமானவராவார். —சி

## சைக்கிள் திருட்டு

(அச்சுவேலி)

யாழ் இராசாவின் தோட்டம் அருள்மாதா ஆலைத் திருவழிபாட்டில் கலந்து கொள்ளவந்த குருநகரைச் சேர்ந்த ச. மரிசலீன் என்பவருடைய புத்தம் புதிய ஏசியா சைக்கிள் பூட்டிய நிலையில் திருட்டுப்போயுள்ளது. இச்சம்பவம் கடந்த மாதம் 26ம் திகதி நடைபெற்றது. —59

## இன்று

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலிக்கலைஞர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் இன்று 2ம் திகதி சனிக்கிழமை பி. ப. 3-00மணிக்கு நல்லூரில் நடைபெறும்.

0 0 0

(அச்சுவேலி)

நந்தாவில் அருள்மிகு ஸ்ரீமுன்னைனீஸ்வரர் மஹா நியாச இலட்சார்ச்சனை வழமைபோல் கடந்த மார்ச் 5ந் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது. தினமும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து இன்று சனிக்கிழமை இலட்சார்ச்சனை பூர்த்தியும் அஷ்டோத்தர சங்காபிஷேகத்துடன் விழா நிறைவு பெறுகின்றது. (59)

6 0

(யாழ்ப்பாணம்)

மாற்றம் சஞ்சிகை நடாத்தும் மூதறிஞர் க. தி. சம்பந்தன் நினைவுரை இன்று 2ம் திகதி சனிக்கிழமை பி. ப 3 மணிக்கு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் நடைபெறும்.

0 0

(பருத்தித்துறை)

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஈஸ்டர் ஒருத்தாரமும் பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திரு. தோமஸ் செபமாலை தலைமையில் இன்று 2-ம் திகதி நடைபெறுகின்றது. -52

0 0

(பருத்தித்துறை

விடுதலைப் புலிகள் கலைப்பண்பாட்டுக் கழகத்தின் வீடியோ படங்களைத் தயாரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஈழ திரைப்படப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வீடியோப் படங்களைத் தயாரிப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இன்று 2-ம் திகதி நடைபெறும். -52

0 0

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள்மிகு அரசடி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும்.

# செம்மணி மயானத்தை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மயானத்தை இம் மாதம் 14ம் திகதி தொடக்கம் செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபை பொறுப்பேற்றுள்ளது இதற்கு வலி கிழக்கு பிரதேச சபை அங்கீகாரமளித்துள்ளது.

மயான அபிவிருத்திக்கென கட்டணம் அறவிடுதல் மயான பாதுகாவலர் ஒழுங்கு செய்ய வேண்டியவைகள் போன்ற மயான அபிவிருத்தியை சபை உடனடியாக மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எந்த தனிநபரோ மயான அபிவிருத்தி சபையைத் தவிர கட்டணங்கள் எதுவும் அறவிடப்படக் கூடாது. 14-04-94ம் திகதி தொடக்கம் மயானத்துக்கு பிரேத தகனக் கிரியைக்காக கொண்டு செல்பவர்கள் சபையின் செயற்குழு உறுப்பினர் ஒருவரிடம் இருந்து அனுமதி பெற வேண்டும்.

செம்மணி மயான அபிவிருத்திச் சபையின் தலைவராக திரு. இராச ராஜேஸ்வரன் தங்கராசாவும் செயலாளராக திரு. வ பரமசிவமும், பொருளாளராக திரு நா. காசிநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (ம)


## யாழ். வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

கடந்த 30-3-94ல் யாழ். வணிகர் கழகத்திற்கும், யாழ். வணிக ஊழியர் கழகத்திற்கும் நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் வருகிற

09 - 04 - 94, 10 - 04 - 94

( சனி — ஞாயிறு ) தினங்களில்

° புதுவருட தினத்தை °

முன்னிட்டு

வணிக நிலையங்களை முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாமென

யாழ். வணிகர் கழகத்திற்குட்பட்ட சகல வணிகப் பெருமக்களுக்கும் அறியத்தருகிறோம்.

நன்றி, வணக்கம்

வே. சிற்சபேசன், தலைவர்.

நா. த. அன்னலிங்கம், பொதுச்செயலாளர்.

யாழ். வர்த்தக சங்கம், யாழ்ப்பாணம்.

(ஏ-3951)



## யாழ் ஸ்ரீதர் திரையில்

உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு

நாளை ஞாயிறு மட்டும்

காலை 10.30, பி. ப. 2.30, மாலை 6.00 மணி காட்சிகளாக

★ ராஜேஸ் ★ சர்மா

நடித்த

"குழந்தை ஏசு"

திங்கள் முதல்

"THE KUNG FU KIDS"

(இ926)



## யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்

சங்க பொதுச்சபை பிரதிநிதிகளுக்கு

## விசேட பொதுக் கூட்டம்

16 - 04 - 94

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 16-04-94 சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு சங்கத் தலைவர் திரு த. சிவசுப்பிரமணியம் தலைமையில் சங்க தலைமைச் செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

உபவிதி 26ல் 7வதின் பிரகாரம் மேற்படி கூட்டத்தில் ஏதாவது பிரேரணையை பிரேரிக்க விரும்பின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அப்பிரேரணை பிரதியொன்றை 11-04-94இற்கு முன்னர் சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பிட்ட பிரதி பின்னர் கிடைக்கப்பெறின் பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறமாட்டாது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

திரு. த. சிவசுப்பிரமணியம், மாவட்ட தலைவர், யா. மா. வெ. உ. ச

திரு. ந பாலவிநாயகர், மாவட்ட செயலாளர், யா. மா. வெ. உ. ச

(இ 925)



## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவிற்கு மணிவிழா

-0 0-0 0 0 0 0 0 0 0 0 0-0-0-

இடம்: கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

காலம்: யூன் மாதக் கடைசி வாரத்தில்

தலைவர்: வடமாநில முன்னாள் கல்விப்பணிப்பாளரும், பல்கலைக்கழக பேரவை உறுப்பினருமாகிய திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்

## பேராசிரியர் அ. துரைராசா மணிவிழா நிதியம்

இந்நிதியத்திற்கு மொத்தம் ரூபா 3,00,000/- தேவைப்படுகின்றது

கீழ்வரும் ஒழுங்கின் பிரகாரம் இவ்வாறு நிதியத்திலிருந்து பின்வரும் கல்வி நிறுவனங்களுக்கு பணம் பகிர்ந்தளிக்கப்படும்

ரிக்கற் விபரம்: 10,000/- 5,000/- 3,000/ 1,000/-

(1) உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி - 50,000/-

(2) கொக்குவில் இந்துக் கல்லூரி - 50,000/-

(3) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கான நிதியுதவி

கலைப்பீடம் - 50,000/-

விஞ்ஞானபீடம் - 50,000/-

மருத்துவபீடம் - 50,000/-

விவசாயபீடம் - 50,000/-

பொறியியல்பீடம் - 50,00/-

முதறிஞராகவும், பேரறிஞராகவும் தமிழ்மக்கள் போற்றப்படும் தலைவருக்குத் தேவையான நிதியுதவிகளை வர்த்தக பிரமுகர்களும், கல்விமான்களும் மற்றும் தமிழ் மக்கள் அனைவரும் ஒத்துழைப்புவழங்கிச் சிறப்பிக்குமாறு விழாக்குழுவினர் மிகப்பணிவன்போடு கேட்டுக்கொள்கிறார்கள்.

இங்ஙனம்

மணிவிழாக் குழு

(எ 3953)

யாழ்ப்பாணம்

# எழுபத்தைந்து அகவை நிறைவு காணும் வட்டுக்கோட்டையூர் தமிழறிஞர், செந்தமிழ்ச் செல்வர்

# ★ பண்டிதர் க. மயில்வாகனனார் ★

## தமிழ், சமய, சமூக சேவை நலம் போற்றும்

# பவள விழா மலர் [02-04-1994 சனிக்கிழமை]

## சேவையில் மலர்ந்த வாழ்வு

மானிட வாழ்வு என்பது பொருளிலும் பயனிலும் மாத்திரம் தங்கியதன்று. அது சேவை அடிப்படையில் அமைய வேண்டியது. இத்தகைய பிரிவினிலும் சாந்த குணத்தினாலும் அறிவின் தெளிவினாலும் எமது உள்ளத்தில் என்றும் நிலைத்திருப்பவர் பண்டிதர் மயில்வாகனனார்.

செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி



## சிவநெறியும் செந்தமிழும் ஓம்பிய செல்வர்

ஓய்வு பெற்ற பின்னரும் ஒதுங்கிக் கிடந்து விடாமல் கல்வி, சமய சமூக பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவருடைய பெருமைகள் அளப்பில உண்டு. சிவநெறித் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்துவர இறைவன் திருவருள் கூடவேண்டுமென்று தொழுது பிரார்த்திக்கின்றேன்.

நா. தணிகாசலம்பிள்ளை
M. A. (Dip. in Ed
Dip. in Ed, (Management
கல்விப் பணிப்பாளர்
முல்லைப் பிரதேசம்

## பிறந்த நாட்டுக்கு பணிசெய்து பெரும்புகழோடு வாழ்க

செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள் இன்னும் எண்பதாண்டு நூற்றாண்டு முதலாய முதுமையிலும் பல்லாண்டு பலவாயினும் தளராத உளவலிமை உடல் வலிமையோடு எதுவரினும் அஞ்சாது பிறநாட்டுக்கு ஓடிமறையாது பிறந்த நாட்டுப் பணியையே பெரும் பணியாகச் செய்து சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் இனிவரும் காலத்தவருக்குச் சிறப்புறச் செய்யுமாறு உழைப்பதற்குத் திருவருள் கூட்டுவதாக.

சிவநெறிப்புரவலர், கலாநிதி
க. கனகராசா J. P.
மில்க்வைற் நிறுவன உரிமையாளர்

## மேலும் பல நூறு பிறைகள் கண்டு வளர்க! வாழ்க!!

இனிய அன்புள்ளம் பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள் நல்ல தமிழறிஞர், நுண்ணிய நூல் பல கற்றவர். திருஞானசம்பந்தர் அருள்வாக்குப்படி "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" போன்றவர். இவருடன் உரையாடல் நிகழ்த்துவது சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் தருவதாக அமையும். பழகுதற்கு இனிய நட்பினர்; நீர்வேலி — கொழும்பு மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து சிறப்பாக நிர்வாகம் செய்தவர் இவ் அறிஞர் பெருமகனார். இவர் 75வது வயதை எட்டிப் பிடித்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது, மனநிறைவைத் தருகிறது. தமிழறிஞர் க. மயில்வாகனம் மேலும் பல நூறு பிறைகள் கண்டு வளர வாழ நமது பிரார்த்தனை.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

## வாழ்க இவர் மாண்பு

அறிவற்றம் போகார்; நடுநிலை நீங்கார், அறிவியல் வாணிபம் விரும்பார். அன்புநெறி வழுவார்; அறத்திறம் பிறழார்; இத்தகையது இவர் வண்ண எண்ணம்; எழுத்து எண்ணமும் இவையே. வாழ்க இவர் மாண்பு.

சித்தாந்த கலாநிதி.
வித்துவான், பண்டிதர்
மு. கந்தையா B. A

## சைவ உலகு பெருமையடைகிறது!

நீண்ட காலம் பெரும் பணி ஆற்றிவரும் செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள் நல்ல தேக சுகத்துடனும், நீண்ட ஆயுளுடனும் நலமே வாழ்ந்து மேலும் எம்மவர்களுக்கு நல்வழிகாட்டி நிற்கும் நல்லாசானாக விளங்க அவருக்கு அனைத்து நலன்களையும் நல்கும் வண்ணம் இறையருளைப் பிரார்த்திக்கின்றேன். அவரது சீரிய பணிகளால் சைவ உலகு பெருமையடைகின்றது.

ப. கோபாலகிருஷ்ணன்
தலைவர்
இந்து நாகரிகத் துறை,
யாழ். பல்கலைக் கழகம்

## சங்கத் தமிழ் வளர்த்த சான்றோன்

தமிழ் இனியது என்பதனை மயில்வாகனன் உரைநடையை வாசிப்போர் எளிதிற் கண்டுகொள்வர். கற்கும் காலத்திலேயே சங்கத் தமிழே அவர் நாவிலும் எழுத்திலும் வளர்ந்தது. சிலவேளைகளில் அவர் உரைநடை சங்கப் பாடல்களோ என ஐயுறும் வண்ணம் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டிருக்கும். தூய தமிழ்ச் சொற்களைத் தெரிந்து எழுதுவோர் சொல்லுக்காக எடுத்த கருத்தினை நுட்பமாகச் சொல்லாது விடுவதுமுண்டு. மயில்வாகனனுடைய உரைநடையோ எடுத்த கருத்தினை நுட்பமாகவும் சரியாகவும் சொல்லும் தன்மையது. சங்கத் தமிழில் இன்றைய கருத்துக்களைப் பிறழாமற் சொல்லலாமா என்று நான் ஐயுற்றது உண்டு. எந்தக் கருத்தையும் சொல்லக்கூடிய வளம் படைத்தது தமிழ்மொழி என்பதனை அவர் உரையிலிருந்து கற்றுக்கொண்டேன். இப்படிப்பட்ட ஒரு தனிநடை இவருக்கே வாய்ந்தது.

பண்டிதர்
க. சச்சிதானந்தன்

## தமிழ்ச் சங்கம் அமைக்க முயன்றவர்

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கம் தாபிப்பதில் பெருமுயற்சி செய்தவர்களில் ஒருவராய், செயலாளர், தலைவர் பதவிகளை வகித்தவராய், சங்க அமைப்புகளில் கருப்பொருளாயுள்ள முதறிஞர் பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள் 75-ம் அகவையைத் தொடும் வேளையில் அன்னாரின் தமிழ், சமய, சமூக சேவை நலன் பாராட்டி பவள விழா எடுக்கின்றோம்: அன்னார் தொடர்ந்தும் நற்றமிழ்ப் பணி புரிந்து முத்து விழா நூற்றாண்டு விழாக்களும் காண அருள்புரிய வேண்டுமென்று தமிழ் தந்த சற்குருவாகிய சிவபரம்பொருளை மன மொழி மெய்களால் வந்தித்து வழுத்துகின்றோம்.

அருட்புலவர் பண்டிதர்
அ. ஆறுமுகம்
தலைவர்
வட்டுக்கோட்டைத் தொகுதி
தமிழ்ச் சங்கம்

## அவரின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு

தகுதி வாய்ந்த சான்றோர்களை அவர்களின் வாழ்நாளிலேயே பாராட்டி விழா வெடுப்பதனால், பெருமகிழ்வடைகின்றோம். அதுகண்டு நாமும் மகிழ்வுறுகின்றோம். இதுவே புத்தி பூர்வமானது செய்யப்படவேண்டியது.

பண்டிதர் திரு. க. மயில்வாகனனார் கல்வியறிவாலும், வயதாலும் முதிர்ந்தவர். ஒரு சைவப் பெரியார், ஆசாரசீலர் அவர் ஆசிரியராகப் பணிபுரிந்து பல மாணவர்களை வாழ்க்கையில் வெகு முன்னேற்றம் அடையச் செய்தவர். அவரின் சீரிய தொண்டுகளை விளக்கப் புகின் ஒரு புத்தகமே எழுதலாம்.

பல சைவசமய நூல்களையும் மாணவர்களுக்குத் துணையாகும் அரிய நூல்களையும் பழந்தமிழில் எழுதியுள்ளார்கள். அவர் எல்லோரதும் உள்ளங்களில் தனியிடம் பிடித்துக்கொண்ட பெருமகனார்.

அவரின் ஆடம்பரமற்ற வாழ்க்கை, எல்லோர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாக இலங்குகின்றது. எல்லோரையும் இன்முகங்காட்டி உபசரிக்கும் இனிய பண்பும் பரோபகார சிந்தையும் இவரைப்போல் எவர்க்கும் அமைதல் அரிது.

இன்னும் வயது கூட்டான அமிர்த நூற்றாண்டு விழாக்கள் கண்டு சகல செல்வ போகம் மிக்க இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்று இறையருளை உவமாகவேண்டி அவரை ஆசீர்வதிக்கின்றோம்.

என்றும் வேண்டும்
இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

## சிறந்தனவற்றைச் செய்து சிறப்புற்று வாழும் செம்மல்

பண்டிதர் க. மயில்வாகனனார் அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கப் பலர் முயற்சிகளைப் பல மேற்கொண்டுள்ளனர். சிறந்தனவற்றை செய்து சிறப்புற்று வாழும் செம்மல்களைப் பாராட்டுவது எம்முடைய கடன் பண்டிதர் மயில்வாகனனார் ஒரு பொதுவான மனிதர் அல்லர். அப்படியாயின் அவர் சாதித்தவை என்ன?

அவர் தலபுராணம், மும்மணிமாலை, திருவூஞ்சல் அந்தாதி ஆகிய இலக்கிய வடிவங்களைக் கொண்ட ஆக்கங்களைத் தந்துள்ளார். அந்தாதி, காயத்திரி மந்திரம் ஆகியவற்றுக்கு உரை எழுதியுள்ளார். குழந்தைப் பாடல்கள் உட்படப் பல பாக்கள் புனைந்த பாவலர். மாணவர் கட்டுரைகளுடன், தமிழ் மொழிப் பாட நூல்கள் எழுதிய சிறந்த பேச்சாளர். இவை அவர் சாதித்தவற்றுக்கு வேண்டிய சான்றுகளாகும்.

இறையுணர்வும், இலக்கிய உணர்வும் கொண்ட பண்டிதர் மயில்வாகனனார், மரபுவழிக் கல்வி பெற்றுப் பண்டிதராக விளங்கும் அவர் அக்காலக் கேற்ற வகையில் நூல்களுக்கு உரை செய்யும் பணியிலே ஈடுபட்டுள்ளார். பலரும் செய்யுள்களாலான இலக்கிய, சமய நூல்களை முயன்று கற்க வேண்டுமென்பதால் அவற்றுக்கு உரைகள் பல எழுதியிருக்கின்றார். இறைவன் மீது இவர் பாடிய நூல்கள் பக்திச் சுவை மேம்பட்டனவாகும்.

இவ்வாறு பன்முகப்பட்ட கல்வி, இலக்கியப் பணியாற்று சான்று பணிகளை மக்களுக்கு அவர் அளித்து வந்துள்ளார். இப்பணிகளைப் பாராட்டிப் புகழ, மேலும் பல பணிகள் செய்து சமூகத்துக்கு உதவுவார். அவரைப் பாராட்டி இச்சிறிய உரையினை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

கலாநிதி அ. சண்முகதாஸ்
தமிழ்த்துறைத் தலைவர்
யாழ். பல்கலைக்கழகம்

## சரித்திரம் படைத்தவர்

செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் க. மயில்வாகனம் 75ம் வயதை அடையும் வேளையில் அவர் தொடர்பான மலர் வெளியீட்டுடன் பாராட்டு விழாவையும் நடாத்த, வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் தீர்மானித்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பல காலத்தையும் பல தரப்பட்டனவுமான இலக்கண,

(4ம் பக்கம் பார்க்க)

ப. சச்சிதானந்தன்
B. Sc
முன்னாள் கல்வி அதிகாரி

## செந்தமிழ்க் காவலர் வாழ்க

எல்லோரும் பரவுகின்ற புகழ்சேர் கோவே
ஏற்றபல வளமாரும் வாழ்வும் பெற்றுச்
சொல்லாரும் கவிவளமும் கருத்தும் நல்ல
துலங்கிடுசீர் மிகுந்ததமிழ் மொழிக்க ஓங்கி
இல்லறத்தின் மாண்பினுக்கோர் துணையாய் நின்ற
எழில் மனைவி மக்களோடு பவளம் கண்டு
இல்லை நடம் புரியுமரன் அருளினாலே
சீர் மயில்வா கனனாரே வாழ்க வாழ்க

தமிழ்மணி, புலவர் நா. சிவபாதசுந்தரனார்
பொருளாளர் வித்துவான்.



# நந்தாவில் அருள்மிகு ஸ்ரீமுன்னனீஸ்வரர் ஆலய 1008 சங்காபிஷேகமும் மஹாநியாச இலட்சார்ச்சனை பூர்த்தியும் விசேட மலர்

[02-04-1994 சனிக்கிழமை]

## தெய்வீகமணம்பரப்பி அருள் பாலிக்கும் முன்னனீஸ்வரர்

சைவமும், தமிழும் மேலோங்கியுள்ள யாழ்ப்பாணத்து கோண்டாவில் மேற்கில் வளம்கொழிக்கும் நந்தாவில் வயல்சூழ தெய்வீக நறுமணம்வீசி மேவியிருக்கும் எழுந்தருளி இருக்கும் முன்னனீஸ்வரர் (முனியப்பர்) கோவில் ஒரு தொன்மையான வரலாற்றினை தன்னகத்தே கொண்டு பண்பாட்டுச்சின்னமாக மிளிர்ந்துவருகிறது.

கோண்டாவிலைச் சேர்ந்த முனியப்பர் சாத்தி குடும்பத்தினர் முன்னனீஸ்வரரை ஒரு கொட்டிலில் வைத்து வழிபாடுசெய்துவந்ததாகவும், பின்னர் 1919ம் ஆண்டளவில் அவர்களினால் கட்டப்பட்ட மண்டபத்தில் முனியப்பரை வைத்து வழிபாடு செய்துவந்துள்ளதாகவும் வரலாறு கூறுகின்றது.

இவர்களது வழித்தோன்றல்கள் இன்றும் உபயங்கள்செய்து வருகின்றனர்.

முனியப்பர் ஆலயத்திற்கு மேற்குப்புறமாக காங்கேசன் துறை வீதிக்கு அருகாமையில் ஊர்ப்பக்கம் அரசமரத்தடியில் "வைரவர் சூலம்" வைத்து காவல் தெய்வமாக வழிபாடு செய்துவந்தனர். 1967ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் அரசமரம் வேருடன்சாய்ந்து விழுந்தபோதும், மக்களுக்கோ அவர்களது உடைமைகளுக்கோ எந்தவிதமான சேதத்தையும் ஏற்படுத்தாது காவல் தெய்வமான "வைரவர்" காத்தருளினார். இதன்பின்னர் 1968ம் ஆண்டு புதிய கட்டடம் அமைக்கப்பெற்று முனியப்பருக்கு கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

"முனியப்பர்" என்றும் கோண்டாவில், கொக்குவில் தாவடி, இணுவில் மக்களுக்கு மனதில் ஒரு பயபிரமை. இப்பயப்பிரமை ஊர்மக்களுக்கு மட்டுமல்லாது காங்கேசன் துறைவீதியால் தினமும் பிரயாணம் செய்யும் மக்களுக்கும் இருக்கச்செய்தது. இதனால் அவர்கள் முன்னனீஸ்வரரை வணங்கிச் செல்வதை பழக்கமாக்கிக் கொண்டார்கள்.

இவ்வாலயத்தில் தினமும் காலையும், மாலையும் பூசைகள் நடைபெற்றுவருகின்றன. மற்றும் நவராத்திரி திருவெம்பா பூசைகள், விசேட அபிஷேகங்கள், இலட்சார்ச்சனை 1008 சங்காபிசேகமும் நடைபெற்று வருகின்றன. இன்று நடைபெறுகின்ற இலட்சார்ச்சனையும் 1008 சங்காபிஷேகமும் 75 வருடங்களுக்கு முன்பிருந்தே நடைபெற்று வருவதாக அறியமுடிகிறது.

முப்பத்திரண்டு அறங்களில் கோவில்களை நிறுவி அவற்றை பேணிப் பாதுகாத்து, பரிபாலித்து ஆசார முறைப்படி நித்திய நைமித்திக பூசைகளை நிறைவுபெறச் செய்வதையே முக்கிய அறமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த வகையில் பெரிய கட்டடங்களுடனும், கோபுரங்களுடனும் சிறந்த பரிபாலகர்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற திருக்கோவில்களைக் காட்டிலும் நந்தாவில் முன்னனீஸ்வரர் ஆலயம் சிறிய மண்டபங்களுடன் இருந்தாலும் ஆலய பிரதம குருவும் உண்மையாளருமான பிரம்மஸ்ரீ ச. கிறிஸ்கந்தராஜாக்குருக்கள் அறவழி நின்று ஆசார சீலராக பக்தி சிரத்தையுடன் நித்திய பூசைகளை நிறைவேற்றி வருவதை தனிச்சிறப்பாக அவ்வூர் மக்களினால் பேசப்படுகிறது.

ஆலயப் பிரதம குருவும் உண்மையாளருமான பிரம்மஸ்ரீ ச. கிறிஸ்கந்தராஜாக் குருக்களுடன் மற்றும் ஒன்பது குருக்கள்மார்கள் இணைந்து இன்று காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகத்தை ஆரம்பித்தும் பிற்பகல் 2 மணிக்கு மஹாநியாச இலட்சார்ச்சனையும் ஆரம்பித்து மாலை 6 மணிக்கு நிறைவுசெய்து வைக்கிறார்கள். எழுபத்தைந்தாவது மஹா நியாச இலட்சார்ச்சனை நடைபெற்ற 29 தினங்களிலும் தெய்வீகமணம் கமழும் நறுமணம் அடியார்கள் அனைவரையும் முன்னனீஸ்வரர் தன்பால் ஈர்த்தமையை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

முன்னனீஸ்வர பெருமானுக்கு ஒரேஒரு குறை. அக்குறை அடியவர்களுக்கு பெரிய மனச்சுமையாகவுள்ளது.

பூசைகள், அர்ச்சனைகள், அபிஷேக ஆராதனைகள் முடிவுற்றதும் வீதிஉலா வந்து அடியவர்களுக்கு அருள் ஆசி வழங்கும் பாக்கியம் இல்லை. இதனை எதிர்காலத்தில் ஏற்படுத்துவதற்கு எல்லாம் வல்ல முன்னனீஸ்வரர் அருள்பாலிக்க வேண்டும்.

ரோகிணி


முன்னனீஸ்வரர் அருள் வேண்டி நிற்கும்

அண்ணா கோப்பி
இணுவில்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பரணி
மருந்துச்சாலை,
456, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மகேந்திரன்
வர்த்தக நிலையம்,
கோண்டாவில் மேற்கு.

எக்ஸ்போ வீடியோ
கொம்பிளெக்ஸ்,
கே. கே. எஸ் வீதி,
கோண்டாவில்.

சிங்கம்ஸ்
மருந்தகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தாவடி
மெடிக்கல்ஸ்,
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

தரமான நிழற்பிரதி
புகைப்படம் எடுப்பதற்கு
தீபன்
இல; 95, மானிப்பாய் வீதி,
மானிப்பாய்.


## இலக்ஷ நாமங்களை உச்சரிப்பதால் இடர்பாடுகள் இடறி ஓடும்

"பிரார்த்தனை" இன்றைய சிக்கல்களிலிருந்து எம்மை விடுவிக்கும் சக்தி வாய்ந்தது. எம்மை சுற்றி வளைத்திருக்கும் இடர்பாடுகளிலிருந்து மீட்சிபெற இறைவன் திருவருளை நோக்கி எமது உள்ளத்தை திருப்ப வேண்டிய காலமிது.

தியானத்தோடு ஆரம்பமாகும் அர்ச்சனையானது அக்னி ஹோமத்தோடு இனிதுபூசையும் நாமங்களையும் நிறைவுபெற்று ஆயிரமாயிரம் அடியவர்களின் உள்ளக்குமுறலை மாற்றிவிடுகிறது.



தேவி உபாசிகளுக்கு ஏற்ற நாமஸ்தோத்திரங்களையும் நாமாவளியையும் படித்துப் பாராயணம் செய்வதோடு மலரோ, பத்திரமோ, குங்குமமோ சக்தி சுவர்ணபுஷ்பம் சமர்ப்பித்து அர்ச்சிக்க வேண்டும்.

தங்கம்மா அப்பாக்குட்டி

பத்துவித சகஸ்ர நாமங்களில் சிறந்தது லலிதா சகஸ்ரநாமமாகும். ஆயிரம் நாமங்களில் முதல் நாமமாக அமைந்தது "ஸ்ரீமாதா" என்பதாகும்.

துன்பம் வரும்போது எமது உள்ளத்தில் இருந்து முதலில் வெளிவருவது "அம்மா" என்ற வார்த்தைதான். இதனை அபிராமிப்பட்டரும் "துன்பங்கள் சூழ்ந்து வரும் போது உன்னைத்தான் அன்னையே என்றழைப்பேன்" நீ காப்பாற்ற வேண்டும் என அழகாக வெளிப்படுத்தினார். தாயை முதலில் நினைப்பதும், வணங்குவதும் கோடி புண்ணியமாகும். சேயின் நன்மை கருதி தன் சுகமனைத்தையும் துறக்கும் தாயானவள் தோன்றாத் துணையாய் நின்று தன்னிஷ்டப்படி காத்து வாழ வைக்கிறாள்.

"ஸ்ரீ" என்பது மங்களகரமான சிறப்புமிக்கவள் என்பதனை உணர்த்துகிறது. அறம், பொருள், இன்பம், வீடு, செல்வம், பெருமை, அழகு, கல்வி அனைத்தையும் வழங்கும் ஆதிபராசக்தி அவளே என்பதையும் "ஸ்ரீ மாதா" நாமம் விளக்குகிறது. ஆயிரம் நாமங்களையும் ஆயிரம் அர்த்தங்களையும் விளக்கி அன்னையையும் அடியவர்களையும் இணைத்து விடுகிறது.

ஸ்ரீ சூக்தத்தின் முதலாவது மந்திரப் பொருள் "பொன்



நிறம் வாய்ந்தவளும், சகல பாவங்களை நீக்குபவளும், பொன்மாலையும் வெள்ளி மாலையும் அணிந்திருப்பவளும் மக்களுக்காக ஏராளமான ஐசுவரியத்தை வைத்திருப்பவளுமான மகாலக்ஷ்மியை ஓ! அக்கினிபகவானே என்னுடைய நன்மையின் பொருட்டு அழைத்து வாரும்" என்றவாறு அமைந்துள்ளது. இச்சுலோகத்தினை திரும்பத் திரும்பச் சொல்லும்போது அந்தத் தேவி அக்கினிகுண்டத்தில் தோன்றி அனைத்தையும் நல்குவாள் என்ற நம்பிக்கை உண்டு. அக்கினி ஹோமத்தின் மகிமைதான் என்னே!

அன்னையின் கருணைமழை பிக்க தோன்ற வேண்டும். எம்மைச் சூழ்ந்திருக்கும் வெப்பக் கனலைத்தும் நீங்க வேண்டும் என்ற புனித நோக்கத்தோடு நடைபெறும் இவ்வைபவம் எமது மக்களுக்கு ஒரு மீட்பு நிலையை அளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளத்தில் எழுகிறது.

மனிதனை மனிதனாகக் காணுகின்ற பண்புகள் இன்று உலகில் மழுங்கி விட்டன. வேறுபாடும், கூறுபாடும், மாறுபாடும் கற்பித்துச் சமூகத்தில் பிளவுகள் ஏற்படுத்தி வாழும் இயல்பு சைவமக்களிடையே பல காலமாக இருந்து வருவது ஒரு சாபக்கேடாக அமைந்துவிட்டது. இவை மெல்ல மெல்ல விலகி ஒளிமயமான புதிய சமுதாயமொன்று உருவாக வேண்டுமானால், ஒன்றுபட்டுப் பிரார்த்தனை பண்ணி, தான, தரும நிகழ்ச்சிகளில் உள்ளத்தைச் செலுத்தி "அன்பே சிவம்" என்று அனைவரும் வாழப் பயின்று கொள்வோமாக.

## முன்னனீஸ்வரர் ஸ்துதி

கன்னலின் பெருநாமம் லக்ஷம்பாடிக்
கண்ணுதல் கடவுளெனும் சிவமூர்த்தி
முன்னனீஸ் வரன்பதத்தில் அருச்சனைகள்
முந்துமொழிப் பக்தியுடன் பரவிஏத்தி
இன்னமுதவூர் கோண்டாவில் நந்தாவில்
இனித்திடக்கோயில் கொண்ட இறைவனுக்கே
அன்னஅபி ஷேகங்கள் ஆராதனை
ஆற்ற அருள் முனீஸ்வரனும் அளிப்பான் ஐயன்

"கவிமாமணி"


முன்னனீஸ்வரர் அருள் : யாவருக்கும் கிட்டுக !

கந்தையா
விற்பனை நிலையம்,
"ஈழநாடு" முகவர்,
கே. கே. எஸ். வீதி, தாவடி.

திருப்பதி ரெக்ஸ்,
33, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சண்முகன்
வர்த்தக நிலையம்,
ஒப்பிமடிச் சந்தி, கொக்குவில்.

சிக்கோ
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

